## யூலை- 14- வெள்ளி

### புனித கத்தரி தெக்காவித்தா

### ஆண்டவரை நம்பு: நலமானதைச் செய்: நாட்டிலேயே குடியிரு: நம்பத் தக்கவராய் வாழ். திபா. 37:3

### முதல் வாசகம்: தொடக்க நூல்46:1 – 7,28 – 30

பின்பு இஸ்ரயேல் தமக்கிருந்த யாவற்றையும் சேர்த்துக்கொண்டு புறப்பட்டு, பெயேர்செபாவைச் சென்றடைந்தார். அவ்விடத்தில் தம் தந்தை ஈசாக்கின் கடவுளுக்கு பலிகளை ஒப்புக்கொடுத்தார். அன்றிரவு கடவுள் இஸ்ரயேலுக்குக் காட்சி அளித்து, ”யாக்கோபு! யாக்கோபு!” என்று அழைத்தார். அவர், ”இதோ அடியேன்” என்றார்.கடவுள், ”உன் தந்தையின் கடவுளான இறைவன் நானே, எகிப்திற்குச் செல்ல நீ அஞ்ச வேண்டாம். அங்கே உன்னைப் பெரிய இனமாக வளரச் செய்வேன்.நானும் உன்னோடு எகிப்திற்கு வருவேன். உன்னை நான் அங்கிருந்து மீண்டும் அழைத்து வருவேன். யோசேப்பு தன் கையாலே உன் கண்களை மூடுவான்” என்றார்.யாக்கோபு பெயேர்செபாவை விட்டுப் புறப்பட்டார். இஸ்ரயேலின் புதல்வர்கள் தம் தந்தையாகிய யாக்கோபையும் தங்கள் பிள்ளைகளையும் மனைவியரையும் அவருக்குப் பார்வோன் அனுப்பியிருந்த வண்டிகளில் ஏற்றிக் கொண்டனர்.கானான் நாட்டில் அவர்கள் சேர்த்திருந்த ஆடு மாடுகளையும் சொத்துகளையும் சேகரித்துக் கொண்டனர். இவ்வாறு யாக்கோபு தம் வழிமரபினர் அனைவரோடும் எகிப்திற்குப் போனார்.தம் புதல்வரையும் அவர்கள் புதல்வரையும் தம் புதல்வியரையும் புதல்வரின் புதல்வியரையும் தம் வழிமரபினர் அனைவரையும் அவர் தம்மோடு எகிப்திற்கு அழைத்துக் கொண்டு சென்றார். கோசேன் பகுதியில் யோசேப்பு தம்மை வந்து சந்திக்குமாறு யாக்கோபு யூதாவைத் தமக்குமுன் அனுப்பியிருந்தார். அவர்கள் கோசேன் வந்து சேர்ந்தார்கள்.யோசேப்பு தம் தேரைப் பூட்டிக்கொண்டு தம் தந்தை இஸ்ரயேலைச் சந்திக்கச் சென்றார். யோசேப்பு தம் தந்தையைக் கண்டவுடன் அவரை அரவணைத்து அவர் தோளில் சாய்ந்து கொண்டு வெகுநேரம் அழுதார்.அப்பொழுது, இஸ்ரயேல் யோசேப்பிடம், ”இப்பொழுது நான் சாகத் தயார். நீ உயிரோடு தான் இருக்கிறாய்! உன் முகத்தைக் கண்ணாரக் கண்டுவிட்டேன்!” என்றார்.

**பதில்பாடல் :** நேர்மையாளருக்கு தீர்ப்பு ஆண்டவரிடமிந்து வருகின்றது

### நற்செய்தி : மத்தேயு 10 : 16 - 23

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களை நோக்கிக் கூறியதாவது: ”இதோ! ஓநாய்களிடையே ஆடுகளை அனுப்புவதைப்போல நான் உங்களை அனுப்புகிறேன். எனவே பாம்புகளைப்போல முன்மதி உடையவர்களாகவும் புறாக்களைப்போலக் கபடு அற்றவர்களாகவும் இருங்கள்.எச்சரிக்கையாக இருங்கள். ஏனெனில் மனிதர்கள் உங்களை யூதச் சங்கங்களிடம் ஒப்புவிப்பார்கள். தங்கள் தொழுகைக்கூடங்களில் உங்களைச் சாட்டையால் அடிப்பார்கள்.என்பொருட்டு ஆளுநர்களிடமும் அரசர்களிடமும் உங்களை இழுத்துச்செல்வார்கள். இவ்வாறு யூதர்கள் முன்னும் பிற இனத்தவர் முன்னும் சான்று பகர்வீர்கள்.இப்படி அவர்கள் உங்களை ஒப்புவிக்கும்பொழுது, ”என்ன பேசுவது, எப்படிப் பேசுவது” என நீங்கள் கவலைப்பட வேண்டாம். நீங்கள் என்ன பேச வேண்டும் என்பது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும்.ஏனெனில் பேசுபவர் நீங்கள் அல்ல. மாறாக, உங்கள் தந்தையின் ஆவியாரே உங்கள் வழியாய்ப் பேசுவார்.சகோதரர் சகோதரிகள் தம் உடன் சகோதரர் சகோதரிகளையும் தந்தையர் பிள்ளைகளையும் கொல்வதற்கென ஒப்புவிப்பார்கள். பிள்ளைகள் பெற்றோர்க்கு எதிராக எழுந்து அவர்களைக் கொல்வார்கள்.என் பெயரின் பொருட்டு உங்களை எல்லாரும் வெறுப்பர். இறுதிவரை மன உறுதியுடன் இருப்போரே மீட்கப்படுவர்.அவர்கள் உங்களை ஒரு நகரில் துன்புறுத்தினால் வேறொரு நகருக்கு ஓடிப்போங்கள். மானிட மகனின் வருகைக்குமுன் நீங்கள் இஸ்ரயேலின் எல்லா நகர்களையும் சுற்றி முடித்திருக்க மாட்டீர்கள் என உறுதியாகவே உங்களுக்குச் சொல்கிறேன்“ என்றார்.

**தியானம்:** கிறிஸ்தவ வாழ்வு என்பது சொர்க்க உலக மல்ல. மாறாக, பாடுகள் மூலம் பரமனின் பாதமடைவது என இன்றைய நற்செய்தி எடுத்துக்கூறி, நாம் இயேசுவின் நற்செய்திக்காக வாழும் போது பாடுகள், துன்பங்கள், வெறுத்து ஒதுக்குதல்கள், புறம்பே தள்ளல்கள் இருக்கும் என்பதனை நாமுணர்ந்து வாழ எமக்கு அழைப்பு விடுக்கின்றது. துன்பங்களும், துயரங்களும் அலையலையாக எமது வாழ்க்கைப் படகை மோதி வருமாயின் எவ்வாறு நாம் மகிழ்ச்சி என்னும் துறைமுகத்தில் நங்கூரமிடுவது என சிந்திக்கும் எமக்கு, “உங்கள் தந்தையின் ஆவியாரே உங்கள் வழியாய்ப் பேசுவார்” (மத்தேயு10:20) என இறைமகன் இயேசு தெளிவாகக் குறிப்பிடுகின்றார். இயேசு தமது பாடுகளின் போது காட்டிக் கொடுக்கப்பட்டார். வெறுத்து ஒதுக்கப்பட்டார். துன்புறுத்தப்பட்டார் எனினும், பரலோகதந்தையில் அவருக்கிருந்த நம்பிக்கையில் கடுகளவும் விலகவில்லை. “என் பிதாவே ஏன் என்னைக் கை நெகிழ்ந்தீர்” எனக் கதறி அழுதாலும், “உமதுகையில் எனது ஆவியை ஒப்படைக்கிறேன்” என்று நம்பிக்கையோடு உயிர் துறந்தார். நாம் தவறாது வழிபடும் புனித ஸ்தோவான், புனிதபேதுரு ,புனிதபவுல், புனிதஅந்தோனியார், புனிதசெபஸ்தியார், யேசுவுக்காக பாடுகள் படவில்லையா? துன்பங்கள் அனுபவிக்கவில்லையா? வேதனைகளைச் சுமக்கவில்லையா? அப்படியிருக்க எமது வாழ்வில் சிறிய துன்பங்கள் வந்தவுடன் நாம் எதற்காக தடுமாறுகின்றோம்?. திரி எரிந்தால் தான் விளக்குக்கு ஒளிகொடுக்க முடியும். வாழைமரம் வெட்டப்பட்டால் தான் சுவைதரும் கனியைக் கொடுக்கமுடியும். சாதாரன அற்பமனிதர்கள் எம்மாத்திரம்? இறுதிக்காலம் இதுவென உணர்வோம். நற்கனிகொடாத மரங்களெல்லாம் வெட்டப்பட்டு அக்கினியில் போடப்படும். தூய ஆவியின் துணைவேண்டி அனுதினமும் செபிப்போம். நமது வாழ்க்கைப்படகு அக்கரை செல்ல அவர் துணை செய்வார்